1970 ஆகஸ்ட் 27]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஆடு துறை 27 என்ற நெல் 1 ஏக்கருக்கு 1,726 கிலோ விளைந்தால், இந்த 'கருணு' என்கிற நெல் ஒரு ஏக்கருக்கு 1998 கிலோ குறைந்த அளவு, 2,228 கிலோ வரிஏய்ப்பு அதிகப்படி அளவு விளையும்.

வரி ஏய்ப்பு.

* 68 வினு—**திரு. கரு. சீமைச்சாமி :** மாண்புமிகு உணவு வணிகவரித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) ராஜ்ய வர்த்தக வரி இலாகா அதிகாரிகள் 1969 செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் மொத்த வியாபாரக் கடை களையும், எண்ணெய் ஆலைகளின் விற்பனை இடங்களையும் சென்னை யில் சோதனை போட்டார்களா ?

(இ) அதனுல் சர்க்காருக்கு எவ்வளவு வரி ஏய்ப்பு கண்டு பிடிக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) வரி ரூ. 1,91,735.83.

(இ) அபராதம் ரூ. 31,944.45.

கால்நடை மருந்தகங்கள்

* 72 வினு—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு உணவு, வணிகவரித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், கிருஷ்ணராயபுரத்தில் கால்நடை மருந்தகம் ஒன்று தொடங்கும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

(இ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) கிருஷ்ணராயபுரத் திற்கென கால்நடை மருந்தகம் ஒன்றை ஏற்படுத்த 1968-ம் ஆண்டி லேயே அரசு அனுமதித்துள்ளது. 1-2-1969 முதல் அது நிரந்தர மான கட்டடத்தில் இயங்கி வருகிறது.

(இ) வினுவிற்கு இடமில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, லாலாப் பேட்டை, பழைய ஜெயங்கொண்டம், கொசூர் போன்ற இடங்களில் கிளை மருந்தகம் இதுவரை துவக்கப்படவில்லை. இதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தனிக்கேள்வி போட்டால் பதில் சொல்லப்படும்.

* 73 வினு—**புலவர் பொ. பொன்னம்பலம்:** மாண்புமிகு உணவு, வணிகவரித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

திருமயம் தொகுதியில் எத்தனை புதிய கால்நடை மருந்தகங் கள் அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஏதுவுமில்லை.

புலவர் பொ. பொன்னம்பலம்: திருமயம் தொகுதியில் ஏதாவது கிளை மருந்தகம் அமைக்கப்படுகிற சூழ்நிலை இருக்கிறதா என்று அறிய விழைகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியத்தில் கால்நடை சிறு மருந்தகம் மட்டுமே தலைமையிடத்தில் செயல்பட்டு வந்தது. பின்னர் அத்துறை சீரமைக்கப்பட்ட பின் முறையான கால்நடை மருந்தகமாக 1970-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் முதல் தேதியன்று அது மாற்றப்பட்டது. மேற்கொண்டு தகவல் எதுவுமில்லை.

Construction of dam on Varattar river

* 74 Q.—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Public works be pleased to state—

(a) whether the construction of anicut across varattar river in Ellapudiampatty in Harur Taluk has been taken up; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ) இத் திட்டத்திற்கு ரூபாய் 3 இலட்ச செலவில் அரசு ஒப்புதல் வழங்கி யுள்ளது. அணைக்கட்டு வேலையைத் தொடங்க ஒப்பந்தம் முடிவு செய்யப்பட்டுள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன்: இந்தப் புதிய அணைக்கட்டுத் திட்டத்தின் கீழ் எத்தனை ஏக்கர் புதியதாக நிலங்கள் பாசனத் திற்குக் கொண்டு வரப்படும் என்று சொல்ல முடியுமா?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: By the execution of the scheme an extent of 69.44 acres of average cultivation in the above four tanks will get assured supply, besides bridging the gap to an extent of 14.13 acres. An extent of 118.18 acres of new ayacut in the above four tanks will also be brought under irrigation. The scheme will also benefit 86.96 acres under pond effect and 64;82 acres under direct ayacut.

திருச்சிராப்பள்ளி—மதுரை இருப்புப்பாதை

* 75 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சியிலிருந்து மதுரை வரை உள்ள ரயில் பாதையை அகலப்பாதையாக ஆக்குவதற்கு மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்துள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: கரூர் வழியாக சேலத்திலிருந்து திண்டுக்கல் வரை அகலப்பாதை அமைத்தல், திண்டுக்கல்—தூத்துக்குடி (மதுரை வழி) இருப்புப்பாதையை அகலப்பாதையாக்குதல் (மணியாச்சியிலிருந்து திருநெல்வேலி